بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

### பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் *19.06.2015* அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

### Summary of the Friday Sermon - 19 June 2015 (Tamil)

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று அருளுக்குரிய ஜுமுஆ நாளாகும். மேலும் அருளுக்குரிய ரமலான் மாதத்தின் முதல் நோன்பாகும். ஆக, இன்றைய தினம் அளவற்ற அருள்களால் ஆரம்பமாகும் நாளாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளின் அருள் மற்றும் அதன் முக்கயத்தும் பற்றி நமக்கு அறிவித்திருக்கின்றார்கள். அதாவது இந்த நாளில் எப்படிப்பட்ட ஒரு நேரம் வருகிறதென்றால் ஒரு நம்பிக்கையாளர் தன்னுடைய இறைவனிடம் கேட்கின்ற துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பிறகு ரமலான் தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ரமலான் மாதம் வருகின்ற போது சுவர்க்கத்தின் வாசல் திறக்கப்படுகின்றன. மேலும் நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன.

ஆக, அல்லாஹ்வினுடைய கருணை இம்மாதத்தில் குறிப்பான உணர்ச்சி கொள்கிறது. மேலும் நம்பிக்கையாளர்களின் மீது அல்லாஹ்வின் கருணை மற்றும் அருட்களின் மழை பொழிகின்றது. ஆனால் அத்தோடு இந்த அருட்களை ஈர்ப்பதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த நாட்களில் எவ்வித வீணான விஷயங்களும் பேசப்படக் கூடாது; எவ்வித கூச்சல் குழப்பமும் இருக்கக் கூடாது; எவ்வித ஏச்சுப் பேச்சும் சண்டைகளும் இருக்கக் கூடாது; ஒவ்வொரு தீமைக்கு எதிராகவும் ஒரு நோன்பாளி நான் நோன்பாளியாக இருக்கின்றேன் என்றே பதிலே இருக்க வேண்டும் என்ற ஒரு சில நிபந்தனைகளையும் கூறியுள்ளார்கள். மேலும் நான் இறைவனுக்காக இந்த அனைத்து தீமைகளிலிருந்தும் தவிர்ந்திருக்கின்றேன் என்ற நிலை இருக்கும் போது, இறைவனுக்காக முயற்சி செய்து இந்த மாதத்தின் அல்லாஹ்வினுடைய கட்டளைகளுக்கு ஏற்ப தன்னுடைய வாழ்க்கையை கழிக்கும் போது பிறகு உண்மையான முறையில் அது நோன்பாக இருக்கும்.

பிறகு ரமலான் மாதத்தின் முக்கியத்தவம் என்ன ? எவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது ? எவ்வாறு நோன்பு வைக்க வேண்டும் ? என்னென்ன விதிமுறைகள் உள்ளன ? என்பது தொடர்பாக அல்லாஹ் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் என்ற விஷயத்தோடு எவ்வாறு இணைத்துக் கூறியுள்ளான் என்றால், وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ என்று கூறியுள்ளான்.

என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நான் அவர்களுக்கு அருகில் இருக்கின்றேன் என்று கூறுவீராக. துஆ செய்யக்கூடியவர் என்னை அழைக்கும் போது நான் அவருடைய துஆக்களை ஏற்றுக் கொள்கின்றேன். ஆக, நேர்வழி பெற வேண்டும் என்பதற்காக துஆ செய்பவர்களும் என்னுடைய கட்டளைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் என்மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான். ரமலானின் நாட்கள் எவ்வளவு அருளுக்குரிய நாட்கள் என்றால் இந்த நாட்களில் செய்யப்படக்கூடிய இறைவணக்கங்களுக்குப் பிறகு என்னுடைய அடியான் என்னைப் பற்றி கேட்டால் நான் முற்றிலும் அருகில் இருக்கின்றேன் என்று கூறுவீராக. உஜீபு தஃவததாயி இதா தஆன் அழைக்கக் கூடியவர் என்னை அழைக்கும் போது நான் அவருடைய துஆக்களை ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆக, ரமலான் மாதத்தில் வரக்கூடிய ஜுமுஆக்களின் முக்கியத்துவம் இரு மடங்காகி விடுகிறது. பகல்களும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய பகல்களாகும். இரவுகளும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய இரவுகளாகும். ஆனால் எந்த நேரம் துஆக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நேரம் என்று உனக்கு தெரியாது என அல்லாஹ் கூறுகின்றான். எனவே, பகல்களையும், இரவுகளையும் துஆக்களில் கழியுங்கள்.

ஆக, இந்த நாட்களிலிருந்து நாம் அதிகமதிகமாக பலன் பெற வேண்டும். பொதுவாக ரமலானில் அல்லாஹ் ஷைத்தான்களை கட்டிவிட்டு பிறகு சொர்க்கத்தின் கதவுகளை திறந்துள்ளான். மேலும் அடியார்களுக்கு அருகில் வந்துள்ளான். பிறகு ரமலானின் ஜுமுஆக்களிலிருந்தும் முழுமையாக பலன் பெற வேண்டும். இந்த நாட்களில் மிகவும் பணிவுடனும், முழுத் தூய்மையுடனும் அல்லாஹ்விடம் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான துஆ என்னவென்றால், அல்லாஹ்வே, எனக்கு ரமலானில் மட்டுமின்றி சாதாரண நிலைமைகளிலும், இரவுகளிலும், பகல்களிலும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற மக்களோடு என்னை சேர்த்து வைப்பாயாக. அதன் மூலம் ரமலான் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். இறையச்சத்தின்படி நடக்க வைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நான் தொடர்ந்து நேர்வழி பெறக்கூடியவர்களோடு இணைய வேண்டும்.

அல்லாஹ் முதல் வசனத்தில் அதாவது நான் ஆரம்பத்தில் ஓதிய வசனத்தில் நோன்பு கடமையாக்கப்படுதல் பற்றி கூறியுள்ளான். அதாவது முந்தைய சமுதாயங்களிலும் நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது. முந்தைய சமுதாயங்கள் நோன்பு வைத்திருந்தன. எனவே நீங்களும் நோன்பு வையுங்கள் என்பது இதன் பொருளல்ல. மாறாக, அந்த வசனத்தின் இறுதியில் என்ன கூறப்பட்டுள்ளது என்றால் லஅல்லகும் தத்தகூன். அதாவது நீங்கள் இறையச்சம் பெற வேண்டும் என்பதற்காகும். மேலும் ஆன்மீக மற்றும் நல்லொழுக்க ரீதியிலான பலவீனங்களிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காகும்.

நான் ஓதிய இந்த வசனத்தில் இந்த இடத்தில் லஅல்லஹும் யர்ஷுதூன் என்று அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது அதன் மூலம் நேர்வழி பெற வேண்டும் என்பதற்காகும். ருஷ்த் என்பதன் பொருள் நேரான பாதை, சரியான அமல், வழிகாட்டலுக்குரிய பாதை, நல்லொழுக்கம், அறிவு முழுமையடைதல், சரியான வழியில் அதனை பயன்படுத்துதல், மேலும் தன்னுடைய இந்த நிலையில் நிலைத்திருத்தல் மற்றும் உறுதியாக இருத்தலை பெறுவது போன்றவையாகும். மனிதன் இறைவனுக்கு முன்பு களப்பற்ற தூய்மையுடன் குனியும் போது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சியை காண்பதோடு மட்டுமின்றி இறையச்சம் மற்றும் நன்மையில் நிலைத்திருந்தவாறு தன்னுடைய ஈமானிலும் உறுதியடைந்து கொண்டே செல்கின்றான். இவ்வாறு அல்லாஹ்வின் அருட்களை பெறக்கூடியவனாக ஆகிவிடுகின்றான்.

ஆக, ரமலான் அளவற்ற அருட்களின் மாதமாகும். ஆனால், அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், ஈமானில் முன்னேறுபவர்களுக்குமே இந்த அருள்கள் கிடைக்கின்றன.

நான் ஏற்கனவே கூறியது போன்று நாம் பணிவையும் அடக்கத்தையும் மேற்கொண்டு நம்முடைய தவறுகளை உணர்ந்து பிறகு அல்லாஹ்வை அடைவதற்கு முயற்சி செய்யும் போது அல்லாஹ்வின் அருளால் கனிகளும் கிடைக்கும். மனிதன் தவறு செய்தாலும் இறைவனுடைய அச்சம் அவனுடைய உள்ளத்தில் இருக்கின்ற வரை, தவறை ஏற்றுக் கொண்டும், உள்ளத்தில் இறையச்சம் கொண்டும் இருப்பின் அல்லாஹ் பாவங்களை மறைத்துக் கொண்டே செல்வான். இறுதியில் ஒருநாள் பாவமன்னிப்பிற்கான நல்வாய்ப்பையும் வழங்குகின்றான்.

ஆக, அதிகமதிகமாக இந்த நாளில் தனக்காகவும், தன்னுடைய உறவினர்களுக்காகவும், ஜமாஅத் அன்பர்களுக்காகவும், நம் அனைவருக்காகவும் இறையச்சம் கிடைக்க நாம் துஆ செய்ய வேண்டும். ஒருவர் மற்றவருக்காக வேதனையுடன் துஆ செய்கின்ற போது மலக்குமார்களும் நமக்காக துஆவில் இணைந்து விடுவார்கள். ரமலானினுடைய பரக்கத்களின் உண்மையான மற்றும் நிலையான காட்சிகளை நாம் காணக்கூடியவர்களாக ஆவோம்.

தக்வா என்பது என்ன ? தக்வா என்பது இறைவனுடைய அச்சம் மற்றும் பயம் ஆகும். அல்லாஹ்வினுடைய அச்சம் நம்முடைய உள்ளத்திலிருந்து அழிந்து விடக்கூடிய அளவிற்கு பாவம் செய்ய துணிந்து விடுவதை தவிர எதுவரை நம்மிடம் இறைவனுடைய அச்சமும் பயமும் இருக்குமோ நம்முடைய பலவீனங்களையும் பாவங்களையும் அல்லாஹ் மறைப்பான். நாம் அவனின் பாதுகாப்பில் இருப்போம்.

ஆக, இந்த மாதத்தின் அருட்களிலிருந்து பலன் பெறுவதற்கு நம்மில் ஒவ்வொருவரும் இறைவனின் அடியானாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய இயலாமையின் காரணமாக நம்முடைய துஆக்களை சில சமயத்திற்காக தாமதித்தாலும் அதாவது தாய் தன்னுடைய குழந்தையின் சீர்திருத்தத்திற்காக சில நேரத்திற்கு தவிர்ந்திருப்பதைப் போன்று அதில் கடுமையான கோபம் இருப்பதில்லை. ஆனால், குழந்தை தாயின் மீது இருக்கக்கூடிய அன்பின் காரணமாக அவளின் பக்கம் செல்லும் போது தாய் அவனை தோளோடு அனைத்துக் கொள்கிறாள். ஆக, அல்லாஹ் தாயை விட அதிகமாக மன்னிக்கக் கூடியவனாவான். என்னுடைய அடியான் எப்போது என்னிடம் பாவமன்னிப்பு கோரி என்னிடம் வருகின்றான். நான் அவனை அதன் மூலம் மன்னிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறைவன் மீது ஆணையாக ! பாலைவனத்தில் தன்னுடைய தொலைந்து போன ஒட்டகம் கிடைப்பதனால் சந்தோஷம் அடையக்கூடியவனை விட அதிகமாக அல்லாஹ் தன்னுடைய அடியான் பாவமன்னிப்புக் கோரும் போது சந்தோஷமடைகின்றான்.

அடியான் அல்லாஹ்வினுடைய அன்பை தன்னுடைய உள்ளத்தில் கொண்டவாறு ஆண்டு முழுவதும் தவறு செய்திருந்தாலும், பலவீனங்கள் இருந்தாலும் அல்லாஹ் அவனின் பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் அல்லாஹ்விடம் வரும் போது அல்லாஹ் ஓடி வந்தவாறு அவனை அணைக்கிறான் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே ரமலான் வருகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் கூறுகிறான். எவரேனும் ஒருவர் ஒரு ஜான் என்னை நோக்கி வந்தால் நான் ஒரு அடி அவனை நோக்கி செல்கின்றேன். அவன் எனக்கு ஒரு அடி நெருங்கி வந்தால் நான் இரண்டு அடி அவனை நோக்கி நெருக்கமாகின்றேன். அவன் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவனின் பக்கம் ஓடி வருகின்றேன்.

ஆக, தாயை விட அதிக கருணையுள்ள நம்முடைய இறைவன் பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்ள மற்றும் அடியானோடு சந்தோஷமாவதற்கு பல்வேறு ஏற்பாடுகளை செய்திருக்கின்றான். அடியான் அதிலிருந்து பலன் பெறவில்லை என்றால் பிறகு இது அடியானின் துரதிஷ்டமாகும். மேலும் இது அவனின் கடின உள்ளத்தினாலாகும்.

அல்லாஹ்விற்கு அவனுடைய அடியானின் மீது இருக்கின்ற அன்பின் வரைபடத்தை இந்த இரு உதாரணங்களைக் கொண்டு கூறப்பட்டுள்ளது. ஆனால் உண்மையில் அல்லாஹ்வின் அன்பின் வரைபடம் இந்த உதாரணங்களை விட மிகவும் மகத்துவமிக்கதாகும். அல்லாஹ் எந்த அன்பு மற்றும் நேசத்தும் தனது அடியானை பார்க்கின்றானோ அதை நம்மால் ஒருபோதும்

விளக்கிடவே முடியாது. இந்த ஹதீஸ்களிலிருந்தும் தெளிவாவது என்னவென்றால் உதாரணம் வழங்கப்பட்ட பிறகும் கூட உண்மையில் இந்த உதாரணங்கள் அன்பின் மாபெரும் ஒரு வரைபடத்தை தருகின்றது தான். ஆனால், அல்லாஹ்விற்கு தன்னுடைய அடியானிடம் இருக்கின்ற அன்பு உங்களுடைய இந்த உலக உதாரணங்களை விட மிகவும் உயர்ந்ததாகும். அதை குறிப்பிடுவது மிகவும் கஷ்டமான ஒன்றாகும். மனிதன் மிகவும் பலவீனமானவனாகவும் குறுகிய அறிவுடையவனாகவும் இருக்கின்றான். அல்லாஹ்வின் இருப்பு மிகவும் உயர்ந்தாகும்.

இந்த அன்பைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய இன்னொரு உதாரணத்தை நான் எடுத்துக் கூறுகிறேன்.

பதர் போரின் போது எதிரிகள் தோல்வியடைந்த போது ஏறக்குறைய போர் முடிவடைந்திருந்தது. காஃபிர்களின் பெரும் பெரும் சிப்பாய்கள் தங்களுடைய வாகனங்களில் அமர்ந்து அவைகளை சாட்டையினால் அடித்து மிக விரைவாக போர்க்களத்திலிருந்து ஓடி முஸ்லிம்களிடமிருந்து தூரம் செல்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண் எவ்வித அச்சமுமின்றி திரிந்து கொண்டிருந்தாள். அவளிடம் ஒரு வேகமும், பைத்தியத்தைப் போன்ற நிலையும் தென்பட்டது. சில சமயம் ஏதேனும் ஒரு குழந்தையை தூக்குவாள். சில நேரம் வேறொரு குழந்தையை தூக்குவாள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணைப் பார்த்த போது, இந்த பெண்ணினுடைய குழந்தை காணாமல் போய் விட்டான். இவள் அவனை தேடுகின்றாள் என சஹாபாக்கள் கூறினர். தாயின் அன்பு எந்த அளவிற்கு மேலோங்கி இருந்தது என்றால் அவள் போர்க்களத்தில் இருக்கின்றாள். அங்கு எல்லா பக்கமும் அழிவு நிகழ்ந்திருக்கின்றது என்பதைக் கூட உணரவில்லை. அந்த பெண் பைத்தியத்தைப் போன்று திரிந்து கொண்டிருந்தாள். எந்த குழந்தையைப் பார்த்தாலும் அதை தன்னோடு அனைத்து கொள்வாள். பிறகு அது அவளுடைய குழந்தை இல்லை என்பது தெரிய வந்த போது முன்னேறிச் செல்வாள். இறுதியில் அவளுக்கு அவளுடைய குழந்தை கிடைத்து விட்டது. அவள் அதை தன்னோடு அனைத்தாள். அதனுடன் அன்பு செலுத்தினாள். பிறகு உலகத்தைப் பற்றிய கவனமே இல்லாமல் அந்த குழந்தையை வைத்துக் கொண்டு அங்கேயே அமர்ந்து விட்டாள். இது போர்க்களம் என்ற கவலையும் அவளுக்கு இருக்கவில்லை. இங்கு எல்லா பக்கமும் சடலங்கள் சிதறிக் கிடக்கின்றன என்ற கவலையும் அவளுக்கு இருக்கவில்லை. இப்போது போர் முழுமையாக முடிவடையவில்லை; அவளுக்கு என்ன இழப்பு வேண்டுமானாலும் நேரலாம் என்ற எண்ணமும் அவளுக்கு இருக்கவில்லை.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவளுக்கு அவளுடைய குழந்தை கிடைத்ததும் எவ்வளவு நிம்மதியுடன் அமர்ந்து விட்டாள் என்பதை நீங்கள் பார்த்தீர்களா ? ஆனால், அந்த குழந்தையை தேடும் போது எந்த அளவிற்கு நிம்மதியற்ற நிலைமை இருந்தது ? நிம்மதியிழந்தவாறு ஓடிக் கொண்டிருந்தாள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதே உதாரணம் தான் அல்லாஹ் தன்னுடைய அடியானின் மீது கொண்டிருக்கின்ற அன்பிற்கும் ஆகும். மாறாக, அவன் இதை விட அதிகமாக அன்பு கொண்டிருக்கின்றான். அடியான் தன்னுடைய பாவங்கள் மற்றும் தவறுகளின் காரணமாக இறைவனை இழந்த போது எவ்வாறு அந்த பெண்ணிற்கு அவளுடைய குழந்தை காணாமல் போனதனால் ஏற்பட்ட துக்கத்தை விட அதிகமாக துக்கம் ஏற்படுகிறது. பிறகு அடியான் பாவமன்னிப்பு கோரி திரும்பும் போது அந்த பெண்ணிற்கு தனது குழந்தை கிடைத்த போது ஏற்பட்ட மகிழ்ச்சியை விட அதிகமான மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

ஆக, நம்முடைய இறைவன் எப்பொழுதும் மன்னிப்பதற்காக தயாராக இருக்கின்றான். நிபந்தனை என்னவென்றால் நாமும் அவனுடைய மன்னிப்பை தேடுவதற்கு தயாராக வேண்டும். நாம் எப்போது அவன் பக்கம் செல்கிறோம் என்பதை அவன் பார்க்கிறான்.

ஆக, இந்த அருளுக்குரிய மாதத்தில் நாம் எந்த அளவிற்கு இந்த சத்தாருல் உயூப் மற்றும் கஃப்பாருஸ் ஸுனூப் இறைவனின் பக்கம் ஓட வேண்டிய தேவை இருக்கின்றது. அவனின் முன் முழுமையாக குனிவதற்கு தேவை இருக்கின்றது. ஷைய்த்தான் ஒவ்வொரு மூலையிலும் நின்று கொண்டு நம்மை தீய தூண்டுதல்களில் விழ வைக்க முயற்சி செய்கின்றான். ஆனால் நாம் அவனோடு போட்டி போட்டு அல்லாஹ்வின் அடைக்கலத்தை பெறுதவற்கு முயற்சி செய்து அவனின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அவனை தோற்கடிக்க வேண்டும். மேலும் தம்மைத் தாமே அல்லாஹ்வின் உண்மையான அடியானாக ஆக்க வேண்டும். அப்போது தான் நாம் ரமலானிலிருந்து முழுமையான அருளைப் பெற முடியும்.

நாம் நமது துஆக்களை நமக்கு மற்றும் நம்முடைய நெருக்கமானவர்கள் வரை மட்டும் குறுகியதாக வைக்கக் கூடாது. மாறாக, இதற்கு மிக அதிகமாக விரிவு கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அப்போது தான் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இருப்பதற்கான உரிமையை செலுத்த முடியும். அப்போது தான் அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைத்து நம்மீது செய்திருக்கின்ற பேருபகாரத்திற்கு நன்றி செலுத்த முடியும். இந்த ஜமாஅத்தில் நம்மை இணைத்துக் கொள்வதோடு மட்டும் நம்முடைய பணி முடிவடைவதில்லை. மாறாக, அஹ்மதியான பிறகு நாம் அஹ்மதியாகி விட்டோம். பைஅத் செய்து விட்டோம் என்பது மட்டும் போதுமானதல்ல. மாறாக, இறைவன் நம்மீது ஒரு மாபெரும் பொறுப்பை சுமத்தி இருக்கின்றான். மேலும் இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தை துஆவின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். அதன் மூலம் ஜமாஅத்தினுடைய முன்னேற்றத்தில் நாம் உதவியாளர்களாக ஆக வேண்டும் என்பதற்காகும். நாம் இயலாதவர்களாவோம், பலவீனமானவர்களாவோம். நம்முடைய தவறுகளை ஒப்புக் கொள்கிறோம். நம்முடைய இயலாமையையும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், இவை அனைத்திற்கு பிறகும் கூட எவர்களின் மீது அல்லாஹ் ஓர் மாபெரும் நோக்கத்தை அடையக்கூடிய பொறுப்பை வழங்கி இருக்கின்றானோ அவர்களைச் சார்ந்தவர்களாவோம். இந்த பொறுப்பை அல்லாஹ்வினுடைய அருளை ஈர்க்காமல் நிறைவேற்ற முடியாது.

நாங்கள் பலகீனமானவர்களாகவும், இயலாதவர்களாகவும் இருக்கின்றோம். எங்களுடைய முயற்சிகளால் மட்டும் இதை பூர்த்தி செய்து விட முடியாது. ஆம். நாங்கள் உன்னுடைய கட்டளையின் கீழ் எல்லா தியாகங்களுக்கும் தயாராக இருக்கின்றோம். ஆனால் நீயும் உன்னுடைய அருளால் எந்த மறைமுகமான வழிமுறைகளை இந்த நோக்கத்தை அடைவதற்கு வைத்துள்ளாயோ அதை வெளிப்படுத்துவாயாக. மேலும் அதனைக் கொண்டு எங்களுக்கு உதவி செய்வாயாக. அதன் மூலம் அசாத்தியமான இந்த பணி சாத்தியமானதாகி விட வேண்டும் என துஆ செய்ய வேண்டும். உண்மை என்னவென்றால், அல்லாஹ் நம்மை வெளிப்படையான கருவியாக ஆக்கி இருக்கின்றான். உலகத்தை வெற்றி கொள்ளக்கூடிய உண்மையான கருவியோ வேறொன்றாகும். ஆனால், எந்நிலையிலும் இந்த வெற்றியை பெறுவதற்கு நம்முடைய உள்ளத்தில் ஒரு வேதனை இருக்க வேண்டும். மேலும் அந்த வேதனை துஆ வடிவில் நம்முடைய உள்ளத்திலிருந்து எழ வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு உதாரணத்தை கூறியுள்ளார்கள். நம்முடைய உதாரணம் பெருமானார் (ஸல்) அவர்கள் பதர் போரின் போது வீசிய கற்களைப் போன்றதாகும். அல்லாஹ் கூறுகின்றான். மா ரமைத்த இத் ரமைத்த வலா கின்னல்லாஹ ரமா அதாவது நீ கற்களை வீசியது நீ கற்களை வீசியது அல்ல. மாறாக, இறைவன் கற்களை வீசியதாகும். நீ வீசிய கற்களோ சற்று தூரம் சென்று விழுந்திருக்கும். ஆனால் இதை நீர் வீசவில்லை. மாறாக, நாம் வீசினோம். கற்களை எறிவதற்காக நபி (ஸல்) அவர்கள் கையை ஓங்கிய போது நாம் புயல் காற்றினை வீசச் செய்தோம் என்று அல்லாஹ் கூறுகின்றான். இந்த காரணத்தினால் அந்த புயல் காற்று கோடிக்கணக்கான கற்களை நிராகரிப்பவர்களின் கண்களில் வீசி விட்டது. அதன் விளைவாக அவர்களின் கண்கள் மூடின. அவர்கள் தாக்குவதில் தோல்வி கண்டனர்.

சுருக்கமாக, அந்த கைப்பிடி அளவு கற்களில் இருந்த உண்மையான ஆற்றல் இறைவனின் வல்லமையாகும். ஆக, நம்முடைய நிலைமையும் நபி (ஸல்) அவர்கள் தம்முடைய கையில் எடுத்து நிராகரிப்பவர்களின் மீது எறிந்த பதரின் அந்த கற்களைப் போன்றதாகும். நபி (ஸல்) அவர்கள் வீசிய அந்த கற்கள் நிராகரிப்பவர்களை குருடர்களாக்கி விட்டது. மாறாக, நபி (ஸல்) அவர்கள் வீசிய கற்கள் அவர்களை குருடராக்கவில்லை. மாறாக, புயல் வடிவில் அல்லாஹ் வீசிய கற்களே அவர்களை குருடராக்கியது.

ஆக, நம்மைத் தவிர இந்த பணியை செய்யக்கூடிய மேலும் சிறந்த விளைவை ஏற்படுத்தக்கூடிய இன்னொரு கருவி இருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். இஸ்லாத்தை பிற மார்க்கங்களை விட மேலோங்கச் செய்யும் இந்த சிறப்பான விளைவுகளுக்கு வேறு சில காரணிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். இஸ்லாத்தை உலகில் வெற்றி பெறச் செய்வதற்குரிய அந்த கருவி அந்த ஆயுதம் அடியானின் இறைவனுடைய அருட்களை ஈர்க்கக்கூடிய துஆக்கள் ஆகும். மேலும் அல்லாஹ்வின் அருளின் மூலமாகவே சாத்தியமில்லாத பணியும் சாத்தியமாகின்றது.

எனவே இந்த நாட்களில் அதிகமாக துஆ செய்யுங்கள். தமக்காகவும் ஒருவர் மற்றவருக்காகவும், ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவும் எதிரிகளின் தோல்விக்காகவும் அல்லாஹ்வினுடைய கண்ணியமும் மகத்துவமும் வெளிப்படுவதற்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் இறை இருப்பை மறுத்துக் கொண்டு செல்கிறது. அல்லாஹ்வை அடையாளங்கண்டு கொள்ளக்கூடியதாக அல்லாஹ் உலகை ஆக்குவானாக. அல்லாஹ் நம்முடைய பலகீனங்களையும், கவனக்குறைவையும் மன்னித்தருள்வானாக. இஸ்லாத்தை பிற அனைத்து மார்க்கங்களை விடவும் மேலோங்கச் செய்யக்கூடிய அளவிற்கு முழுமையாக பயன்படுத்தக்கூடிய ஆற்றலை எங்களுக்குள் ஏற்படுத்துவாயாக. நம்மில் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் உண்மையான சேவகராக ஆவோமாக. உலக ஆசைகள் நமக்கு ஒன்றுமற்றதாக இருக்கட்டுமாக. நாம் மார்க்கத்தை மேலோங்கச் செய்வதற்கு நம்முடைய அனைத்து ஆற்றல்களையும் முழுமையான முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வை கொண்டவர்களாக இருப்போமாக. எதிரிகளினுடைய சக்தியும், ஆற்றலும் நம்முடைய சக்தி மற்றும் ஆற்றலுக்கு முன்பு ஒன்றுமற்றதாகவும், இழிவானதாகவும் ஆகக்கூடிய அளவிற்கு அல்லாஹ் நம்முடைய அமல்களிலும், திறமைகளிலும் ஆற்றலை உருவாக்குவானாக. அல்லாஹ் நம்முடைய தவறுகளை மன்னிக்க மட்டும் செய்யாமல் அல்லாஹ்வினுடைய கட்டளைகளை ஒருபோதும் மீறாமல் இருக்கக் கூடிய அளவிற்கு பாவங்களின் மீது வெறுப்பை ஏற்படுத்துவானாக. நீங்கள் என்னுடைய கட்டளைகளின்படி செயல்படுங்கள். என்மீது முழுமையான முறையில் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறிய மக்களோடு இணைபவர்களாவோமாக. நன்மைகளின் மீது நமக்கு நேசம் உண்டாகட்டுமாக. தக்வா நம்முடைய உள்ளங்களில் உறுதியாக நிலைபெறட்டுமாக. அல்லாஹ்வினுடைய அன்பும் நேசமும் நமது உணவாகட்டுமாக. நம்முடைய ஒவ்வொரு அமலும், ஒவ்வொரு சொல்லும், செயலும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்ப அமையட்டுமாக. நாம் அவனிடம் செல்லும் போது அவனுடைய விருப்பத்தினை வழங்குவானாக. அல்லாஹ் ரமலானை இந்த அனைத்தையும் நாம் பெறக்கூடியவர்களாக ஆக்கட்டுமாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 19.06.2015
Tamil Translation : Moulavi. M.B. Tahir Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516